செ.வெ.எண்-491 ரூபாய்.50,000/- ரொக்கப்பரிசு 4 கிராமம் தங்கப்பதக்கம் நாள் - 3-08-2016

# தலைசிறந்த கைவினை கலைஞர்களுக்கான மாநில விருது
# மாவட்ட ஆட்சி தலைவர் அறிவிப்பு

*****

1. தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களின் கைத்தொழில் திறமையினை வெளிக்கொணர்ந்து அவர்களை கௌரவித்து பாராட்டுகள் வழங்கவும் மேலும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மூலமாக ஒவ்வொரு வருடமும் பூம்புகார் மாநில விருதுகளை வழங்கிவருகிறது.

2. ஆண்டொன்றிற்கு 10 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தலா ரூ.50,000/- ரொக்க பரிசும், 4 கிராமம் தங்க பதக்கமும், தாமிரப் பத்திரமும் மற்றும் ஒரு சான்றிதழ் வழங்கப்படும்.

3. ஏற்கனவே பூம்புகார் மாநில விருது பெற்றவர்கள் மீண்டும் தேர்வில் கலந்து கொள்ளக்கூடாது.

4. கைவினைஞர்களின் அனுபவம் மற்றும் அவர் தம் தொழிலில் ஆற்றியுள்ள சேவை போன்ற மற்ற சிறப்பு அம்சங்கள் தேர்ச்சியின்போது கவனத்தில் கொள்ளப்படும்.

5. தமிழ்நாட்டைச் சேர்ந்த கைவினைஞர்கள் மட்டும் இத்தேர்வில் கலந்துகொள்ளலாம்.

6. விண்ணப்பத்தில் விருதுக்காக உற்பத்தி செய்யப்படவுள்ள பொருளின் முழுவிவரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். (விண்ணப்பத்துடன் விருதுக்கான பொருளை அனுப்ப தேவையில்லை).

7. விண்ணப்பத்தில் விருதுக்காக குறிப்பிட்டுள்ள பொருளினை விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளான 31.08.2016-க்குப் பிறகு துவக்கப்பட்டு 60 நாட்களுக்குள் (அதாவது 31.10.2016-க்குள்) செய்து முடிக்கப்பட வேண்டும்.

8. விருதுக்கான பொருளின் உற்பத்தி நடத்துக் கொண்டிருக்கும்போது இந்நிறுவன அலுவலர்கள் / மேலாளர்கள் ஆய்வு செய்து புகைப்படம் / வீடியோ பதிவு செய்து சான்று அளிப்பார்கள்.

9. விருதுக்கான பொருளின் உற்பத்தியை ஒவ்வொரு கட்டத்திலும் விண்ணப்பதாரர் தாமாகவே முன்வந்து புகைப்படம் / வீடியோ பதிவு செய்து விருதுக்கான பொருளுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

10. விருதிற்குரிய பொருளை சமர்பிக்கும்போது பத்து ரூபாய் முத்திரைத் தாளில் கைவினைஞரின் உறுதிமொழிப்பத்திரம் முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி அல்லது சான்றுறுதி அலுவலர் (Notary Public) கையொப்பத்துடன் கொடுக்கப்பட வேண்டும்.

11. இருப்பிட முகவரிக்கான அத்தாட்சி (குடும்ப அட்டை/ வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் / புகைப்படத்துடன் கூடிய வங்கி கணக்கு புத்தகம்) ஆகியவற்றின் - ஏதாவது ஒன்றின் நகல் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

12. a. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மட்டும் மேற்கண்டுள்ள பூம்புகார், சென்னை தலைமை அலுவலகத்திற்கு 31.08.2016 அன்று மாலை 5.00 மணிக்குள் வந்துசேர வேண்டும். (அலுவலக நாட்கள் திங்கள் முதல் வெள்ளி வரை)

b. மேலும், விண்ணப்பம் மற்றும் விருதுக்கான வழிமுறைகளை உதவி இயக்குனர் கைவினைப்பொருட்கள் விற்பனை மற்றும் சேவை விரிவாக்க மையம் மத்திய அரசு கைவினைப்பொருட்கள் வளர்ச்சி ஆணையர் அலுவலகம், சிவராஜ் பில்டிங், மணிமேடை, நாகர்கோவில் (04652-232361) என்ற முகவரியில் நேரிலோ, தபால்மூலமோ பெற்றுக்கொள்ளாலாம்.

C. கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, சிவகங்கை, மதுரை, தேனி, இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டத்தை சார்ந்த கைவினைஞர்கள் நாகர்கோவில் உதவி இயக்குனர் பரிந்துரையின் பேரில் தங்களது விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கலாம்.

பூம்புகார் விற்பனை நிலைய மற்றும் உற்பத்தி நிலைய மேலாளர்கள் / அபிவிருத்தி ஆணையர் அலுவலகத்தைச் சார்ந்த அந்தந்த பகுதி உதவி இயக்குநர்கள் (கைத்திறன்) / கிராப்ட் கவுன்சில் (தமிழ்நாடு/இந்தியா/உலகம்) ஆகிய யாராவது ஒருவரால் புகைப்படத்தில் கையொப்பமிட்டு பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

14. விருதுக்காக தயாரிக்கப்பட்ட பொருள் 31.10.2016 அன்று மாலை 5.00 மணி வரை பூம்புகார் சென்னை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். (அலுவலக நாட்கள் திங்கள் முதல் வெள்ளி வரை)

**இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்து உள்ளார்**

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்

L. BALU
Assistant Director (H)
Office of the Development Commissioner
(HANDICRAFTS), HM & SEC,
Ministry of Textiles, Govt. of India,
Shivaraj Building, Nagercoil - 629 001